**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

நாள் 28.04.2025

OS. No. 233 /2011

பக்கம் 6

PW1 பெயர் சுதாகர பிரசாத்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கிராம நிர்வாக அலுவலரிடன் 2008 ஆண்டு பட்டா பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக செட்டில்மெண்ட் ஆவணத்தின் விவரம் தெரியவந்தது. செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுயத்தியது தொடர்பாக பிரதிவாதிக்கு அல்லது அவரது மகனுக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் மகனை இவ்வழக்கில் ஏதாவது ஒரு தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யகோரி இந்த வழக்கில் பரிகாரம் மாற்ற எந்த நடவடிக்கையும் எடுத்தேனா என்றால் இல்லை. 2008 ஆண்டு தாவா சொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள சொத்துகள் விவசாய நிலங்கள் இருந்தா என்றால் தரிசு நிலங்களா தான் இருந்தது. தற்போது தாவா சொத்தை சுற்றிலும் வீட்டு மனை பிரிவுகள் வந்துவிட்டதா என்றால் இல்லை. தாவா சொத்திலிருந்து சுமார் 8 கி.மீ தொலைவில் பரந்துார் கிராமம் உள்ளது. 2008ஆண்டு பிரதிவாதிக்கு எனக்கும் பணம் கொடுத்தல் வாங்கல் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பிரதிவாதி எனக்கு எந்த காலத்திலும் கிரையம் செய்து ஒப்புகொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை விற்பதற்கு பிரதிவாதி எந்த தேவையும் இருந்ததில்லை என்றால் சரியில்ல. தாவா சொத்தை வாங்குவதற்கு என்னிடம் எந்த காலத்திலும் பொருள் வசதி இருந்ததில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடனை திரும்ப செலுத்திய பின்னரும் பொய்யாக தாவா சொத்து சம்பந்தமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலியான மற்றும்

காலவதியான ஒரு ஒப்பந்தத்தினை கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கணவருக்கு எதிராக நான் குற்றசாட்டுகள் சுமத்தியுள்ள காரணத்தினாலும் அவர் இவ்வழக்கில் தேவையான நபர் என்ற காரணத்தினால் அவரை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுப்படி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை = இல்லை.**

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.